பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 28 செவ்வாய்க்கிழமை 14.10.2025 கதிர் 338

## இனி இது ரகசியம் அல்ல!



இன்றைய எனது பத்தியில் தெரிவிக்கப்போகும் விடயம். தமிழ் அரசியலில் பெரும் புயலைக் கிளப்புவதற்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டிருக்கிறது. ☞2

# இலங்கை உட்பட 3 நாடுகளுக்கு இனி இந்திய ரூபாயில் கடனுதவி

இலங்கை, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளுக்கு இந்திய ரூபாயில் கடன்களை வழங்க தீர்மானித்துள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

இந்தியரிசர்வ்வங்கி(RBI)வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, அந்நியச் செலாவணி முகாமைத்துவம் (கடன் வாங்குதல் மற்றும் கடன் வழங்குதல்) விதிமுறைகள், 2018இல் முக்கியமான திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது.

அந்நியச்செலாவணி முகாமைத்துவச் சட்டம், 1999 இன் கீழ், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 'அந்நியச் செலாவணி முகாமைத்துவ (கடன் வாங்குதல் மற்றும் கடன் வழங்குதல்) (திருத்தம்) விதிமுறைகள், 2025' என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

புதிய திருத்தத்தின்படி, இந்திய வங்கிகள் (அத்துடன் அவற்றின் வெளிநாட்டுக் கிளைகளும்) இலங்கை, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளின் வங்கிகள் அல்லது தனிநபர்களுக்கு இந்திய ரூபாயில் (INR) கடன் வழங்கலாம். இந்தக் கடன் வழங்குதல் எல்லை தாண்டிய வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்காக (cross-border trade transactions) அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை இலங்கையில் உள்ள வணிகங்களுக்குக் கடன் பெறுதலை எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, கடன்கள் இந்திய ரூபாயில் வழங்கப்படுவதால், இலங்கை வணிகங்கள் அந்நியச் செலாவணி மாற்று விகித இடர்களைக் குறைத்துக்கொள்ள முடியும். இது இரு நாடுகளுக்கும் இடையேயான ☞2

## இலஞ்சம் பெற ஒத்தாசை புரிந்த பிரதேச செயலக அதிகாரி கைது

இலஞ்சம் பெற உதவி ஒத்தாசை புரிந்த நியாகம பிரதேச செயலாளர் அலுவலக அபிவிருத்தி அதிகாரி ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் அளிக்கப்பட்டிருந்த முறைப்பாட்டுக்கமைய அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். முறைப்பாட்டாளர் வீடு ஒன்றை பெறுவதற்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் 10 இலட்சம் ரூபா நிதி உதவிக்கான அனுமதியை பெற்றுக் கொண்டுள்ளார்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் குறித்த நிதியிலிருந்து 1,50.000 ரூபா தொகை முதற்கட்டமாக வழங்கப்பட்ட நிலையில், மீதமுள்ள பணத்தை பெற்று தர உதவுவதாகத் தெரிவித்து 25 ஆயிரம் ரூபா பணத்தை கப்பமாக பெற்றுக் கொண்ட சம்பவத்தில் முதன்மை சந்தேகநபரான அபிவிருத்தி அதிகார சபையின் ☞2

## ஜே.வி.பி. மட்டுமே இனி ஆட்சிக்கு வரும் என்று எண்ணுவது பகல் கனவு மட்டுமே

### நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் கருத்து

இடதுசாரி ஆட்சிக்கு எதிராக வலதுசாரி கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். மாகாணசபைத்தேர்தலில் அது நிச்சயம் நடக்கும். மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மாத்திரமே இனி இலங்கையில் ஆட்சிமைக்கும் என்று எண்ணினால் அது பகல் கனவாகும். இலங்கைக்கு ஒருபோதும் ஜே.வி.பி.யினரால் நிரந்தர உரிமையாளர்களாக முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவும், முகாமைத்துவக் குழுவும் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு ஏதுவான காரணிகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இடதுசாரி ஆட்சிக்கு எதிராக வலதுசாரி கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். அதனை நாம் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வருகின்றோம். இது நிச்சயம் இடம்பெறும்.

உத்தேச மாகாணசபைத் தேர்தலில் தலைவர்கள் களமிறங்கப் போவதில்லை. எனவே இந்த தேர்தலில் தென்னிலங்கை முகாம்களால் ஒன்றிணைந்து களமிறங்க முடியும். அவ்வாறு களமிறங்கினால் ☞2

## பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் செயற்படுகிறோம்

### பிரான்ஸ் தூதுவருடனான சந்திப்பில் ரில்வின் தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியின் கொள்கை வெளிப்படுத்தலுக்கு அமைய ஊழல் மோசடியை தடுப்பதற்கும் நிதி வீண்விரயத்தை குறைப்பதற்கும் கடந்த ஒரு வருட காலப்பகுதியில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. 2026 ஆம் ஆண்டாகும்போது பொருளாதாரத்தை வலுப்படுத்தி, அதை நிலையாகப் பேணும் நோக்கத்துடன் தாம் செயற்படுவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். ☞2

## மாகாணத் தேர்தலை இலக்காகக்கொண்டு செப். நிதி அறிக்கை அழகிய வசனங்களில்

### ஐக்கிய மக்கள் சக்தி குத்திக்காட்டு

மாகாணசபைத் தேர்தலும் நடத்தப்படவேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முன்வைத்துள்ள முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகும். இனியும் ஆளும்தரப்பால் மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்த முடியாது. எனவே தேர்தலுக்கு முன்னர் அழகிய வசனங்களால் ஆன வரவு - செலவுதிட்டமே நவம்பரில் முன்வைக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சிக் காலங்களில் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டபோது, யாரை மாற்றினாலும் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என ஜே.வி.பி. விமர்சனங்களை முன்வைத்தது. அதே விமர்சனங்களை இன்று இந்த ஆளும்தரப்பைப் பார்த்து எம்மால் முன்வைக்க முடியும். அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்டிருந்த 4 அமைச்சுக்களில் முன்னெடுக்கப்படவிருந்த வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் 36.6 பில்லியன் ரூபா பயன்படுத்தப்படாமையால், அடுத்த ஆண்டு செலுத்தப்பட வேண்டிய கடனுக்காக மீள செலுத்தப்பட்டுள்ளது.

இயாமையுடைய ஒரு அமைச்சரிடமிருந்து அமைச்சுக்கள் நீக்கப்பட்டு, பிரிதொரு இயாமையுடைய அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அது மாத்திரமின்றி தமது ஆளும்தரப்பில் 25 அமைச்சரவை அமைச்சுக்களும், 25 பிரதி அமைச்சர்களும் மாத்திரமே நியமிக்கப்படும் என்று என்பிபி கூறியது. ஆனால் தற்போது அந்த வரையறைகளைக் கடந்து தமது விருப்பத்துக்கேற்ப அமைச்சுப் பதவிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். ஆளும்தரப்பின் இயலாமை தற்போது வெளிப்படத் ☞2

### 2028 முதல்

## வருடாந்தம் 5 பில்லியன் டொலர் கடனை அடைக்க திட்டம் இல்லை

### ஆளும்தரப்பைச் சாடுகிறார் எதிர்க் கட்சித் தலைவர்

கடந்த ஒரு வருட காலத்தில் அந்நிய நேரடி முதலீடு, ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி போதுமான மட்டத்தில் இல்லை எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர். ஆனால் 2028ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் 5 பில்லியன் டொலர் கடனை இலங்கை அடைக்க வேண்டியுள்ளது. அவ்வாறில்லை எனில் மீண்டும் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும். ஆனால் கடனை அடைப்பதற்கான எந்த உருப்படியான திட்டமும் ஆளும்தரப்பிடம் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மத்துகம நகர சபை கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: சமூகத்தை ஓர் பிரமிட்டாக்கக கருதினால் அதன் கீழ் மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை, எல்லா மட்டங்களிலும் எல்லா வகையிலும் அடக்குமுறைசார் ஆட்சியே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மக்களின் தோள்களில் சுமத்தப்பட்டுள்ள ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆனால், இது அமெரிக்காவோ மேற்குலக நாடு ஒன்றோ இல்லாத காரணத்தால் அந்தப் புயலால் அரசியல் தலைவர் ஒருவர் நேர்மையாக நடந்துகொள்வாரா என்பது கேள்விக்குறிதான். அப்படிஅவர்நேர்மையான நடந்துகொள்ளவில்லையானால் அல்லது அவர் நேர்மையாக நடந்துகொள்ளத் தவறுவதற்கான வாய்ப்பை ஏனைய தமிழ் அரசியல்தலைவர்கள்அனுமதிப்பார்களானால் தமிழ் தேசிய அரசியலுக்குச் சாவு மணி அடிப்பதற்கான அடித்தளமாக அது அமையும். நேர்மையற்றதடத்தில்தமிழ்த்தேசியஅரசியல் பயணிக்குமானால் அது இருப்பதிலும் எந்தப் பயனும் இல்லைத்தானே!

இத்தனை பீடிகைகளுக்கும் காரணம் இருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியல் செய்கின்றேன் என்கிற தமிழ்க் கட்சி ஒன்றின் 60 வயதுக்கும் மேற்பட்ட தலைவர் ஒருவர் வளர்த்த30வயதுப்பச்சைக்கிளிபறந்துவிட்டது என்கிறசர்ச்சைதான் அதற்குக்காரணம். சமூக ஊடகங்களில் பறந்துபோன பச்சைக்கிளி என்று தொடராக இது பற்றிய ஒலிப்பதிவுகள் வலம் வருகின்றன. இதைத் தொடர்ந்து அவரது கட்சிக்காரர்களே அவரைக் கிழித்துத் தொங்கப்போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவரைப் பதவிகளிலிருந்து வெளியேறுமாறு வலியுறுத்துகிறார்கள். ஆனால் அவருக்குப் பதவி விலகும் எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. பதிலுக்கு சம்பவம் 6 வருடங்களுக்கு முன்னர் நடந்தது என்றும் வேண்டுமென்றே திட்டமிட்டு இத்தகைய அவதூறுகளைப் பரப்புகிறார்கள் என்றும் தலைவருக்குநெருக்கமானவர்கள்தெரிவித்துத் தலைவரைக் காப்பாற்றப் பார்க்கிறார்கள். இப்படிக் காரணங்களைத் தெரிவித்து ஆயரை ஏமாற்றுவது போன்று மக்களையும் அவ்வளவு எளிதில் ஏமாற்றிவிடமுடியும்என்று தோன்றவில்லை. அதுவும் மாகாண சபைத் தேர்தல் வர இருக்கும் நிலையில் குறித்த தலைவர் அரசியலைவிட்டு ஒதுங்கவில்லை என்றால்தமிழ்த் தேசியம்பேசும்கட்சிகளுக்கு நிச்சயம் சங்கு தான்.

கதைச்சுருக்கம் இதுதான். தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒருவரும் அவரது உதவியாளரும் அரசியல் பணிகளில் தனக்கு நெருக்கமான ஒருவருடன் பேசுகின்ற ஒலிப் பதிவுகள் சமூக ஊடகங்களில் உலாவத் தொடங்கியிருக்கின்றன. அந்தப்பதிவுகளின்படி அந்தத் தலைவர் 15 வருடங்களாகத் தான் விரும்பித் தொடர்பிலிருந்தார் என்று தானே கூறுகின்ற ஒரு இளம் பெண்ணை மற்றைய நபர் கூட்டிச் சென்று மறைத்து வைத்திருக்கிறாரா என்று விசாரிக்கிறார். அவரோ அதனை மறுக்கிறார். ஒரு கட்டத்தில் தலைவரோ நீயும் ஆம்பிள்ளைதானே, அதனால் நான் விட்டுத் தருவேன் என்கிற ரீதியிலும் கேட்கிறார். அப்போதும் மற்றையவர் மறுக்கிறார். மற்றொரு பதிவில் தன்னுடைய பாணியில் வேலையைக் காட்டுவதற்கு முன்னதான நேரடியாக விசாரணை செய்கிறேன் என்கிறார்.

அதன் பின்னர் வரும் ஒலிப் பதிவில் தலைவர் சந்தேகப்படும் நபர் இருவருக்கும் இடையிலான உரையாடலின் ஒலிப்பதிவை மற்றவர்களுடன்பகிர்ந்துகொண்டார்என்பதால் தனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார் என்று கொந்தளிக்கிறார். அத்துடன் அவரைத் தானிருக்கும் இடத்திற்கு வருமாறு அழைக்கிறார். அந்த நபரோ தான் தனியே வரமாட்டேன் என்றும் மற்றொருவரையும் உடனழைத்துக்கொண்டுமறுநாள்காலையில் வருகின்றேன் என்றும் சொல்கிறார். அதற்கு உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன் என்று தலைவர் மிரட்டுகிறார்.

இந்தக் குரல் பதிவுகளின் இடையே இந்த ஒலிப் பதிவுகளில் சம்பந்தப்பட்ட பெண்ணின் பெயரையும் அந்தத் தலைவரே கூறுகின்றார். அந்தப் பெண் கடந்த சில நாட்களாகத் தனது தொலைபேசி அழைப்புக்களுக்கு பதிலளிக்கும்போது வீட்டிலிருப்பது போன்று காட்டிக்கொண்டாலும் தனக்குத் தெரியாமல், தனக்குக்கூறாமல் வீட்டிருந்து தாய் தந்தையருடன் வெளியேறிவிட்டார் என்றும் கூறுகின்றார். தாய், தந்தையருடன் செல்வதாக இருந்தாலும் தனக்குக் கூறாமல் தனக்கு மறைத்து எப்படிச் செல்ல முடியும் என்று தனது உரிமையை நியாயத்தைக் கேட்கிறார். தலைவர் குறிப்பிடும் அந்தப் பெண் கட்சியின் உறுப்பினர். பிரதேச சபை ஒன்றின் உறுப்பினராகவும் கட்சி சார்பில் பதவி வகித்தவர். அவரது கணவர் குற்றச் செயல் ஒன்றுக்காகக் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார் என்றும் சொல்லப்படுகின்றது.

கிளறக் கிளற இந்த முடை நாற்றம் தாங்க முடியாததாக இருக்கும் என்று தெரிகிறது. இந்தப் பிரச்சினை பூதாகாரமாகி தன்னையும் தமிழ்த் தேசிய அரசியலையும் அழிப்பதற்கு முன்னதாக அந்தத் தலைவர் பதவிகளைத் துறந்து அரசியலைவிட்டு ஒதுங்கி இந்தியாவிற்கு ஓடித் தப்புவதே சிறந்தது. இல்லை அது எனது குரலே அல்ல, ஏஐ தொழில்நுட்பத்தில் இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்று கதைவிட்டுத் தப்பிக் கொள்ள நினைத்தால், பதவிகளையும் அரசியலையும் காப்பாற்றிக்கொள்ள நினைத்தால் அது மிக மிக மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும். ஒலிப்பதிவில் உள்ள குரல் உண்மையானதா இல்லையா என்பதை பரிசோதித்து உறுதிப்படுத்த நிறையவே வழிகள் இருக்கின்றன. அதுவும் தவிர நிலமை கட்டுமீறிப் போகும்போது அந்தப் பெண்ணே ஊடகங்களில் முன்னால் வந்து நேரடியாகக் குற்றஞ்சாட்டும் நிலையும் வரும்.

இந்தப் பிரச்சினைக்காக அவர்களின் கதைகளை முடித்துவிடலாம் என்பதும் இனி நடக்கப் போகும் காரியமில்லை. தங்களைத் தலைவரிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான அனைத்து உத்திகளும் அவர்களுக்கும் தெரிந்தேயிருக்கிறது. போதாததற்கு கட்சிக்குள்ளே இருக்கும் மூத்த தலைவர்களுக்கும் இந்த ஒலிப் பதிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே அவர்களும்இனிமேல்இதனைமூடிமறைத்து தலைவரைக் காப்பதற்காக தங்களைப் பலிக்கடாவாக்கிக் கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. அதுமட்டுமல்ல தலைவர் கூறும் 30 வயதுப் பெண்ணுடன் 15 வருடங்களாகத் தொடர்பு என்கிற கூற்று உண்மையானால் அவரை பல்வேறுபட்ட குற்றங்களுக்குள்ளும் தள்ளிவிடக்கூடியது, அதனை மூடி மறைக்க கட்சியின் மற்றைய தலைவர்கள் அனுமதிப்பதும் குற்றம். மற்றைய கட்சிகளின் தலைவர்களுக்கும்கூட ஒலிப்பதிவுகள் சென்று சேர்ந்திருக்கின்றன என்று அறிகின்றேன். அதிலும் கொள்கைக் கூட்டாளி இது விடயத்தில் என்ன சொல்லப் போகிறார் என்பதை அறிவதில் நான் மிகவும் எக்ஸைட்டிங்காக இருக்கின்றேன்.

சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது சிறந்தது என்று நினைத்து ஆங்காங்கே போய் உதய தரிசனம் செய்வது பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதில் இந்த விடயத்தில் மேலும் மேலும் சாட்சிகளை அதிகரித்துக்கொண்டே செல்லுகிறது என்பதையும் தலைவர் எப்போது புரிந்துகொள்வார் என்று தெரியவில்லை. உங்கள்காலம்முடிந்துவிட்டது, மரியாதையாக (அது இனி எங்கே இருக்கப்போகிறது) விலகிக்கொள்ளுங்கள் என்கிற மற்றவர்களின் குரல் உங்களுக்குக் கேட்க மறுத்தால் சர்வ நாசம்தான்.

கடைசியாக ஒன்று, 60 வயதில் ஓர் அரசியல் தலைவருக்குக் காதல் வரக்கூடாதா, அவர் ஒரு பெண்ணுடனான உறவில் இருக்கக்கூடாதா, அவரும்மனிதர்தானேஎன்று யாராவது வக்காலத்து வாங்க முற்பட்டால் அவர்களுக்கான பதில், அதற்கான சகல உரிமைகளும் தலைவருக்கு இருக்கிறது. எந்த வயதில் அவர் காதலிக்கிறார் அல்லது ஒரு பெண்ணை விரும்புகின்றார் என்பது ஒரு பொருட்டு அல்ல. ஆனால், அது அந்தப் பெண்ணும் இணைந்து ஒருவருக்கொருவர் விரும்புவதாக அது இருக்கவேண்டும். தம்முடையபழையஉறவைக்காரணம்காட்டி திருமணத்திற்குப் புறம்பான ஒரு உறவிற்கு எந்தப் பெண்ணையும் நிர்ப்பந்திக்கும் அதிகாரமோஅதற்குமறுக்கும்பெண்ணையும் அவருக்கு உதவும் மற்றொரு ஆணையும் மிரட்டிப் பணிய வைக்கும் அதிகாரமோ எத்தனை வயதுக்காரராக இருந்தாலும் அவருக்குக் கிடையாது.

இந்த விவகாரம் இப்போதைக்கு முடியும் போன்று தோன்றவில்லை என்பதால், இனி அடிக்கடி இது தொடர்பில் உங்களுக்குத் தகவல் தரவேண்டி இருக்கும் என்று நினைக்கின்றேன் காத்திருங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லை தாண்டிய வர்த்தகம் மற்றும் நிதித் தொடர்புகளை வலுப்படுத்தவும் உதவும்.

## மாகாணத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கியுள்ளதால், மக்கள் மத்தியில் எதிர்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

ஆளும்தரப்பின் திறனற்ற நிர்வாகத்தால் வறுமை நிலை 33 சதவீதத்திலிருந்து 47 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. இவர்கள் ஆட்சியைப் பொறுப்பேற்கும்போது மீள் செலுத்த வேண்டிய கடன் 93 பில்லியன் டொலராகக் காணப்பட்டது. அந்த தொகை தற்போது 105 பில்லியன் டொலர் வரை உயர்வடைந்துள்ளது. கடந்தஆட்சிகாலங்களில் இவர்களது ஆர்ப்பாட்டங்களால் கைவிடப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இன்று பல மில்லியன் டொலர் நட்டத்துவடன் இவர்களே மீளத் தொடங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மாகாணசபைத் தேர்தலில் இதற்கான பிரதி பலன் ஆளும்தரப்புக்குக் கிடைக்கும்.

மாகாணசபைத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைத்துள்ள முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகும். இனியும் இவர்களால் மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்த முடியாது. எனவே தேர்தலுக்கு முன்னர் அழகிய வசனங்களால் ஆன வரவு - செலவு திட்டத்தை நவம்பரில் முன்வைப்பார்கள். ஒன்றை மறைத்து மற்றொன்றை காண்பிக்கும் வரவு - செலவுத் திட்டத்தைப் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

வரி அதிகரிக்கப்படமாட்டாது எனக் கூறுகின்றனர். அவ்வாறெனில் தேர்தலுக்கு முன்னர் கூறியதைப் போன்று வரி குறைக்கப்படுமா? மின்சாரக் கட்டணம், நீர் கட்டணம் குறைக்கப்படுமா? மக்கள் ஆணை வழங்கிய இந்த காரணிகள் இந்த வரவு-செலவு திட்டத்திலாவது நிறைவேற்றப்படுமா? இதற்கான பதிலை ஆளும்தரப்பு வழங்காவிட்டால், ஆளும்தரப்புக்கு மக்கள் சிறந்த பதிலளிப்பர் என்றார்.

## இலஞ்சம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(தொழில்நுட்ப) உத்தியோகத்தர் கருசிங்ஹகே சுரங்க பிரசாத் சோமசிரி செப்டம்பர் 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைஅடுத்து நேற்றுதிங்கட்கிழமை காலை 11.15 மணி அளவில் அவருக்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் நியாகம பிரதேச செயலக அபிவிருத்தி அதிகாரி கிரிதரகே ரணில் நிஷாந்த ஜயவர்தன இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

## வருடாந்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழுத்தங்கள் காரணமாக, நாட்டில் வறுமை தற்போது 50 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2028 இல் கடனைத் திருப்பிச் செலுத்தும் நடவடிக்கையே பெரும் சவாலாக அமையும். 5 பில்லியன் டொலர் வருடாந்தம் கடனைத் திருப்பிச் செலுத்த, வெளிநாட்டு கையிருப்புக்களை நாம் உயர் மட்டத்தில் பேணி வர வேண்டும். நமது நாட்டிற்கு கிட்டும் அந்நிய செலவாணி உயர் மட்டத்திலிருக்க வேண்டும்.

இதற்கு மேலதிகமாக குறைந்தபட்சம் 5 சதவீத பொருளாதார வளர்ச்சி காணப்பட வேண்டும். நாட்டில் அந்நிய நேரடி முதலீடு, ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி போதுமான மட்டத்தில் இல்லை என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். வறுமை அதிகரித்து, மக்களின் கைகளில் புழங்கும் பணத்தின் அளவு குறைந்து வருகிறது.

நுகர்வு, முதலீடு, உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் சேமிப்பு என்பனவும் குறைந்து வருகின்றன. இவை அனைத்தையும் உயர் மட்டத்தில் பேணி வர, பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரிக்கப்பட வேண்டும்.

தற்போது நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் உதவியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களது சொத்துக்களும் உடமைகளும் ஏலம் விடப்படுகின்றன. கடந்த அரசுத் தலைவர் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இலக்காக் கொண்டு இந்த ஏலம் நிறுத்தப்பட்டாலும், அவர்களின் கடன்கள் மறுசீரமைக்கப்படவில்லை. முந்தைய ஆளும்தரப்பும் இந்த ஆளும்தரப்பும் வாக்குகளை தமக்கு பெற்றுக் கொள்வதற்காக இவ்வாறு ஏலத்தை இடைநிறுத்தின.

இந்த ஆண்டு டிசெம்பர் 31, இந்தக் கடன் பொறியில் சிக்கியுள்ள தொழில் உரிமையாளர்களால் தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போனால் அவர்களின் அனைத்து சொத்துக்களும் ஏலத்தில் விடப்படும். இதனால் நமது நாட்டின் பொருளாதாரம் பாரதூரமான நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தெளிவான திட்டமும், தொலைநோக்கு பார்வையும், சிறந்த குழுவும் இந்த ஆளும்தரப்பிடம் இல்லை. பொருளாதாரத் திட்டமொன்று இல்லாததால் நாடு தள்ளாடிக் கொண்டிருக்கிறது. 2028ஆம் ஆண்டாகும்போது ஆபத்தான சூழ்நிலை ஏற்படக்கூடும். நாட்டுக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டில் மூன்றில் ஒரு பங்கு மாத்திரமே கிடைக்கின்றது.

மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கு கிட்டாது போகும் என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது. இந்த இலக்குகளை அடைந்து கொள்ள முடியாமல் போகும் பட்சத்தில், நாடு தனது கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் மீண்டும் வங்குரோத்து நிலையை அடையும். 2022 இல் நாடு வீழ்ந்ததைப் போன்ற ஒரு சூழ்நிலைக்குள் மீண்டும் விழுவதை நான் விரும்பவில்லை.

இந்தச் சூழ்நிலைக்குள் நாம் சிக்காமல் இருக்க, பொருளாதாரம் வேகமாக முன்னேற்றம் காணவேண்டும். ஏற்றுமதிகளை ஊக்குவிக்க வேண்டும். மேலும் திட்டவட்டமான தேசிய பொருளாதார திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் ஆளும்தரப்பிடம் அவ்வாறானதொரு வேலைத்திட்டம் இல்லை. செலுத்த வேண்டிய மொத்த கடன் தொகை, இதற்குத் தேவையான பொருளாதார வளர்ச்சி வீதம், அந்நிய நேரடி முதலீடு குறித்து நான் அண்மையில் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பியிருந்தேன்.

ஆனால் இந்த ஆளும்தரப்பிடமிருந்து இன்னும் எந்தப் பதிலும் இல்லை. 2028 கடன் திருப்பிச் செலுத்துதல் குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்க ஆளும்தரப்பு கால அவகாசம் கோருகிறது. அவ்வாறெனில் இந்தப் பிரச்சினைக்கான பதில் அவர்களிடம் இல்லை. சரியான தொலைநோக்குப் பார்வையும் வேலைத்திட்டமும் ஆளும்தரப்பிடம் இருந்தால், இதற்கு பதிலளிக்க நேரம் கோர வேண்டிய தேவையில்லை என்றார்.

## பொருளாதாரத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸ் தூதுவர் ரெமி லெம்பார்ட் மற்றும் ஜே.வி.பி. பொதுச்செயலாளர் டில்வின் சில்வா ஆகியோருக்கிடையில் நேற்று திங்கட்கிழமை பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள ஜேவிபியின் தலைமை அலுவலத்தில் சந்திப்பொன்றில் இதனைத் தெரிவித்தார். இச்சந்திப்பில், பிரான்ஸ் தூதுவர் அலுவலத்தின் உதவிச் செயற்பாட்டுப் பிரதானி மெதிவ் ஜோன் மற்றும் ஊடக உத்தியோகத்தர் தினேஷா இலேபெரும ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஆளும்தரப்பு அதிகாரத்துக்கு வந்த பின்னர் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களுக்கு பிரான்ஸ் தூதுவர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். குறிப்பாக பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் நிலவுகின்ற இராஜதந்திர உறவுகளை எதிர்காலத்தில் மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதுபோல, இலங்கைக்குள் தேர்தலின் பின்னர் வன்முறைகள் நிலவாமை தொடர்பில் தனது மகிழ்ச்சியை தெரியப்படுத்திய தூதுவர் ரெமி லெம்பர்ட், தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்து ஒரு வருடம் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். அதுபோல, ஊழல் மோசடித் தடுப்பு மற்றும் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பல் நடவடிக்கைகள் தற்போது ஆளும்தரப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் தூதுவர் பாராட்டியுள்ளார்.

இதன்போது, ஜே.வி.பி. பொதுச்செயலாளர் டில்வின் சில்வா, தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தின் அடிப்படையில் ஊழல் மோசடியை தடுப்பதற்கும் நிதி வீண்விரயத்தை குறைப்பதற்கும் கடந்த ஒரு வருட காலப்பகுதியில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாகவும், 2026 ஆம் ஆண்டாகும்போது பொருளாதாரத்தை வலிமைப்பெற செய்வதற்கும், அதை நிலையாக வைத்துக்கொள்வதற்குமான நோக்கத்துடன் தாம் செயற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# போதைப்பொருள் வருகையை தடுக்கும் முதல் படி பிமலிடமிருந்து துறைமுக அமைச்சை நீக்கியதா?

## பொதுஜன பெரமுன கேள்வி

அரசுத் தலைவர் அநுரகுமார போதைப்பொருள் நாட்டுக்குள் வருவதை தடுப்பதற்கான முக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதுளையில் தெரிவித்திருந்தார். அவ்வாறெனில் பிமல் ரத்நாயக்கவிடமிருந்து துறைமுக அமைச்சு நீக்கப்பட்டமைதான் அந்த நடவடிக்கையா என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

கடந்தவாரம் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றம் ஒரு முக்கிய விடயமாகும். இதற்கு முன்னர் எமது ஆளும்தரப்புக்கள் இருந்தபோது அமைச்சரவை மாற்றங்களைச் செய்தபோது, அது தொடர்பாக தொடர்ந்து பல்வேறு குற்றச்சாட்டுகளையும், கேலியானகருத்துக்களையும்கூறிய ஜே.வி.பியினருக்கு இன்று அதே நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆட்சி காலங்களில் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகம் என்று ஜே.வி.பி. கடும் விமர்சனங்களை முன்வைத்து வந்தது. அதனால் அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்களை நியமித்து அமைச்சரவையை அமைப்பதாக்கக கூறினார்கள். ஆனால், அவர்கள் கொடுத்த அந்த வாக்குறுதியையும் இப்போது அவர்களே மீறி, புதிய அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமிக்க நேரிட்டமையை எண்ணிக் கவலையடைகின்றோம்.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பினால் நீங்கள் மீண்டும் ஒருமுறை ஏமாற்றப்பட்டுள்ளீர்கள் என்று நாட்டின் மக்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறோம். இந்நிலையில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு தற்போது நாட்டில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளது. அவ்வாறான சூழல் இந்த ஆளும்தரப்பினாலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுக்களை ராஜபக்சர்கள் மீது சுமத்த முயன்ற போதிலும், பின்னர் ஆளும்தரப்பின் சதித்திட்டம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர் அநுரகுமார மலையகத்தில் கடந்த நல்லாட்சிக் காலத்தில் இந்திய ஆளும்தரப்பால் வழங்கப்பட்டு கட்டப்பட்டிருந்த சில வீடுகள் தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்டு, அங்கு இந்த போதைப்பொருள் அச்சுறுத்தல் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முதல்படி எடுக்கப்பட்டுவிட்டதாகக் கூறினார். ஆனால் எமக்குத் தெரியவரும் முதல்படி என்னவென்றால், பிமல் ரத்நாயக்க துறைமுக அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமைதான்.

கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமைக்கும் நாட்டில் போதைப்பொருள் பயன்பாட்டுக்கும் இடையில் தொடர்பு இருக்கிறதா? இல்லையா? என்பதை மிகவும் ஆழமாக ஆராய வேண்டியது கட்டாயமாகும். எவ்வாறிருப்பினும் இலங்கை வரலாற்றில் இதுவரை செய்யப்பட்ட மிகப் பெரிய மோசடிச் செயல் இது என்பதை நாம் மக்களிடம் தெரிவிக்கின்றோம். விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா நாடாளுமன்றத்தில் முக்கிய விடயங்கள் பலவற்றைத் தெரிவித்திருந்தார்.

அதேபோல், இந்தக் கொள்கலன்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவில் முதலில் முறைப்பாடு செய்த டான் பிரியசாத் சில நாட்களுக்குப் பிறகு படுகொலை செய்யப்பட்டார். அதேபோல், எமது சட்டத்தரணிகள் சங்கம் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளது. அந்த முறைப்பாடு தொடர்பாக இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மிகவும் துரதிர்ஷ்டவசமாக, மிக ஆபத்தான மோசடி குறித்து விசாரணை செய்யாத காவல்துறை, அமைச்சர்களுக்கு எதிரான அவதூறுகள் குறித்து நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளது.

323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை குறித்து குற்றப் புலனாய்வு பிரிவிலும் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவிலும் தொடர்ந்து முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்றுவரை அது குறித்து எந்தவொரு நபரிடமிருந்தும் வாக்குமூலம் கூட பெறப்படவில்லை. அது பற்றி மௌனம் காக்கும் பொலிஸார் தொலைக்காட்சியில் கூறப்பட்ட ஒரு விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்சவிடம் வாக்குமூலம் பதிவு செய்ய முற்படுகிறது.

பொலிஸாருக்கு குற்றங்கள் என்றால் என்ன? தங்கள் கடமை என்ன? என்பது மறந்துவிட்டது. பொலிஸ்மா அதிபரே நீங்கள் இன்னொரு பூஜித் ஜயசுந்தரவாக மாற முயற்சிக்க வேண்டாம். அவர் இறுதியில் சிறையில் அடைக்கப்பட்டார். இன்னொரு பொலிஸ்மா அதிபர் சிறையில் துன்பப்படுவதைக் காண நாங்கள் விரும்பவில்லை என்றார்.




## அமைச்சுக்கு புதிய செயலாளர்

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளராக பொறியியலாளர் எல். குமுது லால் போகஹவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதம், அரசுத் தலைவர்யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று திங்கட்கிழமை முற்பகல் அரசுத் தலைவர் அலுவலகத்தில் வைத்து அவரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தப் புதிய நியமனம் வழங்கும் போது, எல். குமுது லால் போகஹவத்த நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராகப் பணியாற்றி வந்தார்.

அரசுத் தலைவர்யால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின்படி, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சராக வைத்தியர் எச்.எம். சுசில் ரணசிங்க நியமிக்கப்பட்டார். அதன்படி, இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தூக்கம் எப்போது கலையும்?

இன்றைய உலகம் தொழில்நுட்பத்தால் இயங்கும் ஒரு காலக்கட்டத்தில் இருக்கிறது. மின்சார வாகனங்கள் முதல் கைப்பேசிகள் வரை, மனித வாழ்க்கையின் அன்றாட வசதிகளுக்குத் தேவையான அனைத்திற்கும் ஒரு பொதுவான அம்சம் உள்ளது – அரிய பூமிக் கனிமங்கள் (Rare Earth Minerals).

இந்தக் கனிமங்கள் தொழில்நுட்ப வளர்ச்சியின் முதுகெலும்பாக மாறியுள்ளன. ஆனால், இக்கனிமங்கள் சில நாடுகளின் கைகளில் மட்டுமே இருப்பது, உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

### அமெரிக்கா - சீனா மோதல்

சமீபத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், சீனாவுக்கு எதிராக புதிய வரிவிதிகள் (tariffs) விதித்துள்ளார். இதனால் சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் நடைபெறவிருந்த சந்திப்பும் சந்தேகத்திற்கு உள்ளாகியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், சீனா தனது அரிய கனிமங்களின் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்கியுள்ளது. உலகளாவிய அளவில் உற்பத்தி மற்றும் செயல்முறைகளில் 85 முதல் 90 சதவீதம் வரை சீனாவின் ஆதிக்கம் நிலவுகிறது.

இதனால் அமெரிக்கா மட்டுமன்றி, பல நாடுகள் தங்கள் பொருளாதாரமும் தேசிய பாதுகாப்பும் ஆபத்தில் இருப்பதாகக் கருதுகின்றன.

### சீனாவின் புதிய சட்டம்

சீன அரசின் புதிய விதிமுறைகள், அதன் அரிய கனிமங்கள் 0.1 சதவீதம் அளவு கூட உள்ள பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முன்பாக அரசின் அனுமதி பெற வேண்டும் என கூறுகின்றன.

இதன் விளைவாக, மின்காந்தங்கள், அரைச்சமிகொண்டிகள் (semi-conductors), மின்சார பேட்டரிகள் மற்றும் பாதுகாப்பு உற்பத்திகளுக்கான மூலப்பொருட்களின் விநியோகம் கடுமையாக பாதிக்கப்படவிருக்கிறது.

சீன வர்த்தக அமைச்சு இதை "தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கை" என்று கூறினாலும், உலக நாடுகள் இதை பொருளாதார ஆயுதமாக்கல் (weaponisation) எனப் பார்க்கின்றன.

### கடலடியில் கனிமங்கள்

கோபால்ட், நிக்கல், மாங்கனீஸ், தாமிரம் போன்ற கனிமங்கள் இன்றைய உலகில் தங்கத்தைவிட மதிப்பானவையாகியுள்ளன. ஆனால், இவற்றை எடுக்க கடலடிப் பகுதியைத் துளையிடும் ஆழ்கடல் சுரங்கப்பணி (Deep-Sea Mining) வழியாகவே செய்ய முடிகிறது.

இது இன்னும் ஆராயப்படாத கடலடிப் பிரதேசங்களில் நடைபெறுவதால், அதன் சுற்றுச்சூழல் விளைவுகள் குறித்து விஞ்ஞானிகள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பல சர்வதேச அமைப்புகள் இதற்கான தடை அல்லது இடைக்காலத் தடை (moratorium) கோரிக்கையையும் முன்வைத்துள்ளன.

உலக கடலடித் தளத்தின் வெறும் 27 சதவீதம் மட்டுமே நவீன வரைபடங்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில், இந்தியப் பெருங்கடலின் பெரும்பகுதி — அதனுடன் இலங்கையின் பொருளாதார மண்டலம் (Exclusive Economic Zone – EEZ) மற்றும் கண்டத்தட்டு பகுதிகள் இன்னும் முழுமையாக வரைபடமிடப்படவில்லை.

இவை அனைத்தும் இலங்கைக்கு உரிமை கோரப்பட்ட வளங்கள். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக, இந்தப் பகுதிகளில் பிற நாடுகள் ஆராய்ச்சி முயற்சிகள் மேற்கொள்கின்றன என்பது பல்வேறு அறிக்கைகளில் வெளிப்பட்டுள்ளது.

### 'நீல பொருளாதாரம்' பேசும் அரசின் மௌனம்

அரசின் பல அதிகாரிகளும் "நீல பொருளாதாரம்" எனும் வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துகின்றனர். மாநாடுகள், விவாதங்கள், சர்வதேச அரங்குகள் — இவை அனைத்திலும் பேச்சு மட்டுமே உள்ளது. ஆனால் நடைமுறை நடவடிக்கை எதுவும் இல்லை.

இலங்கையின் கடலடிப் பகுதியில் இருக்கும் செல்வங்களை வரைபடமிடவும், ஆராயவும், சுரங்கப் பயன்பாட்டுக்குத் தயாராக்கவும் தேவையான தேசிய திட்டம் எதுவும் உருவாக்கப்படவில்லை.

சில நிபுணர்கள் பலமுறை எச்சரித்தும், அரசு தூங்கும் சிங்கம் போல அமைதியாகவே உள்ளது.

இன்றைய ஆட்சியாளர்கள் மக்களிடம் உடனடி புகழைப் பெறும் சிறிய நடவடிக்கைகளில் மட்டும் கவனம் செலுத்துகின்றனர். ஆனால் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் கடலடிப் பொருளாதாரக் கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு சொந்தமான வளங்கள் நாளை பிற நாடுகளால் பிடுங்கிக் கொள்ளப்பட்டால், அதற்குப் பொறுப்பேற்க யார்?

### கடலடியில் காத்திருக்கும் எதிர்காலம்

இலங்கை கடலடியில் புதைந்திருப்பது வெறும் கனிம செல்வம் அல்ல — அது எதிர்கால தலைமுறைகளின் வாழ்வாதாரத்தின் அடித்தளம்.

அரசு மௌனமாக இருந்தால், நாளைய வரலாறு அதனை அலட்சியத்தின் அரசாக நினைவுகூரும்.

நேரம் விரைந்துகொண்டிருக்கிறது; உலகம் கடலடிக் கனிமங்களைப் பெற்றுக்கொள்கிறது —

ஆனால் இலங்கை இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறதே!

### சட்டத்தரணி தாக்கப்பட்ட சம்பவம்:

## கல்கிஸ்ஸை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகருக்கு இடமாற்றம்

கல்கிஸ்ஸை பொலிஸ் நிலைய முதன்மை பொலிஸ் பரிசோதகருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணியிடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பொலிஸ் பரிசோதகர் துஷார பொலிஸ் மருத்துவ சேவை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்துக்கருகில் சட்டத்தரணியை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக மேற்படி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர் பெ லிஸ் ஊடகப்பிரிவு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சட்டத்தரணி தாக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய காணொளி ஒன்று சமூக வலைதளங்களில் வெகுவாக பகிரப்பட்டுள்ளது. அக்காணொளி காட்சியில் மூத்த சட்டத்தரணி ஒருவர் பொலிஸ்மா அதிபரை தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சிப்பதுடன், பிரியந்த எனது ஜூனியர் குழுவை சேர்ந்தவர். பிரியாந்தவிடம் சொல்லுங்கள் கல்கிஸ்ஸ நீதிமன்றத்தினுள் . பிரியந்தவிடம் என்னை தொடர்பு கொள்ளுமாறு தெரிவியுங்கள், இல்லையேல் அவரது தொலைபேசி எண்ணை தருமாறு கூறுகின்றார்.

குறித்த பதிவை காரணம் காட்டி பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்ய பொலிஸ்மா அதிபர் பணிப்புரை வழங்கினார் என்று வதந்திகள் பரவி வருகின்றன. எனினும் மேற்படி சட்டத்தரணி மற்றும் பொலிஸ் மா அதிபருக்கிடையில் எவ்வித தொடர்பும் இல்லை. சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்தவுடன் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு கல்கிஸ்ஸை பிரிவுக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் பரிசோதகருக்கு அறிவித்திருந்தார். பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்யுமாறு அவர் தெரிவிக்கவில்லை.

விசாரணை தொடர்பில் உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொள்வதற்கு முன்னதாகவே பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

சம்பவத்தின் பின்னர் நீதிமன்ற வளாகத்தில் அமைதியின்மை ஏற்பட்டிருந்த நிலையில், அங்கிருந்த சட்டத்தரணிகளும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இந்நிலையில் பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கல்கிஸ்ஸை நீதவான் கல்கிஸ்ஸை பிரிவுக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் சம்பவத்தின்போது பொலிஸ் அதிகாரிகள் செயற்பட்ட விதம் குறித்துப் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்கள் நேற்று பொறுப்பேற்பு

நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராகப் பதவியேற்ற கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சராகப் பதவியேற்ற நிஷாந்த ஜயவீர ஆகியோர் நேற்று திங்கட்கிழமை நிதி அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, அமைச்சுப் பதவியை வகிப்பது ஒரு சலுகையாக கருதுவது வரலாற்றின் இணைந்துள்ள ஒரு கருத்து என்றும், அது உண்மையில் ஒரு சலுகை அன்றி ஒரு பொறுப்பு என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீர, கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்கு பங்களித்த அதிகாரிகள் நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கி எடுத்துச் செல்வதில் தொடர்ந்து ஆதரவளிப்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் அமைச்சின் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




FREE GIFTS
உலகத்தரம் வாய்ந்த கணினிகள்
NALIN LAPTOPS
NALIN Information Technologies Pvt Ltd.
DIWALI MEGA OFFER
MOUSE | MOUSEPAD | BAG | 64GB PENDRIVE | POUCH | UMBRELLA | CARD READER
MEGA OFFER
3 years warranty Windows 11
3 years warranty Windows 11
M365
msi
1 years warranty Windows 11
Lenovo
2 years warranty
Windows 11
2 years warranty
STARTING PRICE -RS: 137,000/=
Installment Payment Allowed
BOC HNB VISA
Terms & Conditions Apply
Island wide free delivery
Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

## பொருளாதாரத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதல், கடல் வளத்தை பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்காக இலங்கை ஆளும்தரப்பிற்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் பிரான் தூதுவர் ரெமி லெம்பர்ட் இதன்போது தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் நிலவுகின்ற நீண்டகால நட்புறவை மேலும் மேம்படுத்தி தொடர்ந்து பேணுவதற்கும், பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் பிரான்ஸின் முதல்வரிசை முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்பதற்கும் இதன்போது உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கையுடன் தொடர்புகளை பேணும்போது ஒருபோதும் திரைமறைவு நிகழ்ச்சிநிரல் இருக்காது என்றும், எதிர்காலத்தில் அரசதலைவர்கள் பிரான்ஸில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரான்ஸ் தூதுவர் ரெமி லெம்பர்ட் இதன்போது அழைப்பு விடுத்துள்ளார்.

## ஜே.வி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிச்சயம் வெற்றி பெறவும் முடியும். எனவே மாகாணசபைத் தேர்தலானது மாற்றத்துக்கான ஒரு திருப்புமுனையாக அமைய வேண்டும். 1994இல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றுதான், அரசுத் தலைவர்த் தேர்தலிலும் வெற்றி பெற்றார். எனவே அதேபோன்று இம்முறையும் நிச்சயம் மாற்றங்கள் ஏற்படும்.

ஐக்கிய தேசிய கட்சியும் நாமும் ஒரே இல்லத்தில் வாழ்ந்தவர்களாவோம். எம்மிரு கட்சிகளுக்கிடையிலான கொள்கைகளில் பெரும் மாற்றங்கள் எவையும் இல்லை. பிளவுகள் ஏற்பட்டால் வாழ்நாள் முழுவதும் அந்த பிளவுடனேயே பயணிக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல. அதேபோன்று இணைந்து மாத்திரமே பயணிக்க வேண்டும் என்பதும் கட்டாயமல்ல. நாம் ஐ.தே.க.வுடன் இணைந்து பயணத்தைத் தொடங்கிய பின்னர், பொதுஜன பெரமுன, சுதந்திரக் கட்சி என அந்த கூட்டணி மறுபுறம் இணைந்து பயணிக்கும்.

மாகாணசபைத் தேரத்லில் இணைந்த களமிறங்க வேண்டியது தவிர்க்க முடியாதது. அதற்காக அதிக பட்ச அர்ப்பணிப்புடன் பாடுபடுவோம். இதனை குழப்புவதற்கு எவராவது முயற்சித்தால் அவர்கள் தொடர்பிலும் ஊடகங்களிடம் பகிரங்கமாக வெளிப்படுத்துவோம். தற்போதைய அரசியல் சூழ்நிலையில் உத்தேச மாகாணசபைத் தேர்தல் அனைவருக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

எனவே அதற்காக தீர்க்கமான முடிவுகளை எடுக்குமாறு கட்சி தலைமைத்துவத்திடமிருந்து ஆணை கிடைத்தால், அந்தச் சவாலை ஏற்பதற்கும் தயாராகவுள்ளேன். தென்னிலங்கை முகாம்கள் இணைந்தால் மாத்திரமே நான் அதனை செய்வேன்.

2013ஆம் ஆண்டு அப்போதைய எமது தலைவர்ரணில்விக்கிரமசிங்கவிடம் நான் ஒரு விடயத்தை வலியுறுத்தினேன். தொடர்ந்தும் எம்மால் தோல்வியடைந்து கொண்டிருக்க முடியாது. எனவே ஆகக் குறைந்தது கொழும்பிலாவது பொது எதிரணியாக போட்டியிட்டு 50 சதவீதம் வாக்குகளைப் பெற வேண்டும் என்று அவரிடம் கூறினேன்.

தேர்தலில் நாம் எதிர்பார்த்த அந்த இலக்கு நிறைவேறியது. அதனை அடிப்படையாகக் கொண்டே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து ஹரின் பெர்னாண்டோ ஊவா மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்குவதற்கு ஊக்குவிக்கப்பட்டார். அவ்வாறானதொரு பின்னணியிலேயே 2015இல் நாம் வெற்றி பெற்றோம். எனவே மீண்டும் அவ்வாறானதொரு வெற்றியை நிலைநாட்ட வேண்டுமெனில் எந்தவொரு அர்ப்பணிப்புக்கும் நான் தயாராக இருக்கின்றேன்.

ஜே.வி.பி. மாத்திரமே இனி இலங்கையில் ஆட்சிமைக்கும் என்று நளிந்த ஜயதிஸ்ஸ எண்ணினால் அது பகல் கனவாகும். போரை நிறைவு செய்ய மகிந்த ராஜபக்சதான் வாழ்நாள் முழுவதும் அரசுத் தலைவராக இருப்பேன் என நினைத்தார். ஆனால் அவருக்கு என்ன ஆனது? போர் நிறைவடைந்த பின்னர் அவர் இந்த நாட்டின் உரிமையாளராகத் தன்மை நினைத்தார். அதனால்தான் பதவி காலத்தை நீடித்துக் கொண்டு மூன்றாவது முறையாகவும் தேர்தலில் போட்டியிட்டார். ஜே.வி.பி. இந்த வரலாறுகளையும் நினைவில் கொள்ள வேண்டும். ஒருநாளும் அவர்களால் இந்த நாட்டில் நிரந்தர உரிமையாளர்களாக முடியாது - என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.10.2025இல் வெளியிடப்பெற்றது